Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 85 of 2023**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.11**

Defence

Court

| | |
|---|---|
| Name | திரு.பரமசிவம் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 29th day of January 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 29th day of January 2026.**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**:

நான் தற்போது கடலூர் மாவட்டம் புத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.08.2022 முத்தாண்டிகுப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது பண்ருட்டி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு கீழக்கொல்லை கிராமத்தை சேர்ந்த ஞானசெல்வம் என்பவரை விசாரிக்க சென்ற போது அவர் மேல்சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக தெரிந்துக்கொண்டு நான் கடலூர் மருத்துவமனைக்கு சென்று மேற்படி ஞானசெல்வத்திடம் புகார் வாக்குமூலம் பெற்றேன். **நான் பெற்ற புகார் வாக்குமூலம் அதசாஆ 6 ஆகும்.** பின்னர் நிலையம் வந்து புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண் . 364/2022 பிரிவு 294(பி), 323,324,506(2) இதசப்படி வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 7 ஆகும்.** இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**:

அதசாஆ 6 புகார்வாக்குமூலத்தை நான் எழுதினேன். புகார்வாக்குமூலத்தை ஞானசெல்வத்திற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் யார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்வாக்குமூலத்தில் ஞானசெல்வம்

நல்ல உடல் மற்றும் மனநிலையில் இருந்தார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 18.08.2022 அன்று நடந்த சம்பவத்திற்கு புகார்வாக்குமூலம் 20.08.2022 அன்று தான் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 20.08.2022 அன்று தான் ஞானசெல்வம் மருத்துவமணையில் அனுமதிக்கப்பட்டார் என்ற தகவல் காவல் நிலையத்தில் கிடைத்தது. 2 நாட்கள் மருத்துவசிகிச்சையில் ஞானசெல்வம் இருந்த காரணத்தினால் அவரது உடல் மற்றும் மனநிலை சரியில்லாமல் இருந்தது என்றாலும் எனவே அதசாஆ 6 புகார்வாக்குமூலம் நானாக தயாரித்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் தான் அதசாஆ 6 புகார்வாக்குமூலம் என்றால் சரியல்ல. 18.08.2022 அன்றே காவல் நிலையத்திற்கு ஞானசெல்வம் மருத்துவமணையில் அனுமதிக்கப்பட்ட விபரம் தெரிய வந்து விட்டது என்றாலும் அன்றைய தேதி பெறப்பட்ட வாக்குமூலம் வழக்கிற்கு ஏதுவாக இல்லை என்று பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணம் தான் அதசாஆ 6 புகார்வாக்குமூலம் என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலையத்தில் இருந்து பண்ருட்டி நீதிமன்றத்திற்கு 1 மணி நேரத்தில் சென்று விடலாம். முத்தாண்டிகுப்பம் காவல் நிலையத்தில் இருந்து கடலூர் வர 2 மணி நேரம் ஆகும். பகல் 12.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை இரவு 10.00 மணிக்கு தான் கடலூர் நீதித்துறை நடுவரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதசாஆ 7 உள்ள விவரம் முதல் தகவல் கிடையாது

என்றாலும் வழக்கிற்காக அதசாஆ 6 மற்றும் 7 தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*